## “ஜனநாயகத்தை முன்னேற்றுவதற்கு ஊடகவியலை வலுப்படுத்துவோம்”; தகவல் பொதுமக்களின் உரிமை

**உலக பத்திரிகை சுதந்திர தினம் 2021**

யுனெஸ்கோவின் ”விண்ட்ஹோக்” பிரகடனத்தின் 30 ஆண்டுகளை நினைவுகூரும் முகமாக இலங்கை பத்திரிகை ஸ்தாபனமானது உலக பத்திரிகை சுதந்திர தினத்தை 2021 மே மாதம் 03 ஆம் திகதியன்று “தகவல் பொதுமக்களின் உரிமை” எனும் தொனிப்பொருளில் கொண்டாடுகிறது.

சுயாதீனமான மற்றும் பன்மைத்துவம் வாய்ந்த ஊடகத்துறையின் வளர்ச்சிக்கான “விண்ட்ஹோக்” பிரகடனத்தின் 30 ஆண்டுகள் நிறைவானது ஒரு மைல்கல்லாக இருக்கும் அதேவேளை, 1998ஆம் ஆண்டின் ஊடக சுதந்திரம் மற்றும் சமூக பொறுப்பிறகான கொழும்புப் பிரகடனம் இலங்கையில் எமது ஊடகங்களின் சொந்த பாதைக்கும் வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது.

இவ்வருடத்திற்கான கருப்பொருளானது, தகவல்களை மேம்படுத்தும் ஊடகத்தின் முக்கியத்துவம் மற்றும் ஊடகவியலை பாதுகாக்கவும் அதற்கான கேள்வியை ஏற்படுத்துவதற்குமான கல்வியறிவு தகவல் பொதுமக்களின் உரிமையாவதில் முக்கிய பகுதியாக இருப்பதை உறுதிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. ஊடகத்துறையில் நிபுணத்துவத்தை முன்னேற்றுவதற்கும் ஊடக சுதந்திரத்தை மேம்படுத்துவதற்குமான தேடலில் “ஜனநாயகத்தை முன்னேற்றுவதற்கு ஊடகவியலை வலுப்படுத்துவோம்; தகவல் பொதுமக்களின் உரிமை” எனும் கருப்பொருளின் கீழ் சிறந்த ஜனநாயகத்தை உருவாக்குவதற்கான திறவுகோலாக இருக்கும் கூட்டு அபிலாஷைகளின் நம்பகமான தகவல்களை இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் அங்கீகரிக்கின்றது.

இச்செய்தியை பிரதிபலிக்கும் முகமாக “தகவல் பொதுமக்களின் உரிமை” எனும் நிலையை அணுகுவதற்கான முக்கியத்துவத்தை மீண்டும் வலியுறுத்தி உலக பத்திரிகை சுதந்திர தினத்துடன் ஒருங்கே தகவலறியும் உரிமை தொடர்பில் இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் மற்றும் பாத்ஃபைண்டர் அறக்கட்டளை ஒன்றிணைந்து இணையவழி செயலமர்வொன்றை வழங்கவிருக்கின்றது. ‘நிகழ்காலத்தின் பெறுபேறுகள், எதிர்காலத்திற்கான முன்னுரிமைகள்’ , ‘தகவல் அறியும் உரிமையை

நடைமுறைப்படுத்தல்: அபிவிருத்தி முன்னுரிமைகள் மற்றும் ஊழலை அம்பலப்படுத்துதல்' மற்றும் 'தகவல் அறியும் உரிமை; தனியுரிமை மற்றும் தரவு பாதுகாப்பு" ஆகிய தலைப்புகளில் பேச்சாளர்கள் கலந்துரையாடவிருக்கின்றனர். இக்குழு செயலமர்வானது ஊடகவியலாளர் திரு. வருண கருணாதிலகவினால் நெறியாளப்படும்.

இவ்விணையவழி செயலமர்வானது 2021 மே மாதம் 3ஆம் திகதி மாலை 3.30 மணிக்கு zoom தளத்தினூடாக நடைபெறும். மேலதிக விபரங்களை www.slpi.lk எனும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் வலைத்தளத்தினூடாக (Events பகுதியின் கீழ்) அல்லது பேஸ்புக் / ட்விட்டர் பக்கங்களில் காணலாம்.



குழுவின் உறுப்பினர்கள் இடமிருந்து வலமாக, வரிசை 1 - யஷ்வர்தன் குமார் சிங்க- இந்தியா புதுடில்லியின் மத்திய தகவல் ஆணைக்குழுவின் தலைமை தகவல் ஆணையாளர், கிஷாலி பிண்டோ ஜெயவர்த்தன- இலங்கையின் தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் ஆணையாளர், அஸ்வினி நடேசன்- சுயாதீன ஆராய்ச்சியாளர் மற்றும் வழக்கறிஞர், ஷியாம்லால் யாதவ் - தி இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையின் சிரேஷ்ட பத்திரிகை ஆசிரியர்.

வரிசை 2 - ஜெயந்த பெர்னாண்டோ - இலங்கை கணனி அவசர தயார் நிலை ஒருங்கிணைப்பு மையத்தின் பணிப்பாளர்(CERT) தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனத்தின்(ICTA) பொது ஆலோசகர், எம்.ஸ்ரீதர் - இந்திய மத்திய தகவல் ஆணைக்குழுவின் ஆணையாளர், ஊடகவியலாளர் வருண கருணாதிலக- நெறியாள்பவர்.